**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC.411/2023**

**Prosecution witness : அ.சா.2** **Date : 28.11.2025.**

| | |
|---|---|
| **Name : சதிஸ்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் டிஎன்பி நகரில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்கிறேன்.முதல் விசாரணைக்காக பிரமாணம் வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தை எனது முதல் விசாரணையின் ஓர் அங்கமாக பாவிக்கவேண்டுகிறேன். புகார்தாரர் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும் என்று கோரப்படுகிறது.

குறுக்கு விசாரணை

2) தற்போது வெல்டிங் காண்ரக் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் எப்படி தெரியும் என்றால் அவரிடம் வேலை செய்ததால் எனக்கு தெரியும். புகார் தாரர் என்ன பெயரில் நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் அக்சயா என்ற பெயரில நிறுவனம் நடத்தி வந்தார். எத்தனை வருடமாக வேலை செய்து வந்தேன் என்றால் 6-7 வருடமாக வேலை செய்து வந்தேன். புகார்தாரர் கேட்டுகொண்டதற்கிணங்க எதிரி நிறுவனத்திற்கு சென்று எத்தனை நாட்கள் வேலை செய்தேன் என்றால் 2 வருடமாக வேலை செய்து வந்தேன். எந்த வருடம் வேலை செய்தேன் என்றால் 2017-2018 ல் வேலை செய்து வந்தேன்.

3) அவர்களுக்குள் நடந்த விவரம் எனக்கு தெரி யும் என்றால் ஆமாம். எத்தனை ரூபாய்க்கு ஒப்பந்த வேலை செய்தார் என்றால் ரூ.5,49,495/- க்கு வேலை செய்தார். சாட்சி மீண்டும் மற்ற பரிவர்த்தனை தெரியுமா என்றால் தெரியாது.

காசோலை சம்பந்தமான வரவு செலவு மட்டுமே தெரியும். இந்த வழக்கு காசோலை புகார்தாரரிடம் எதிரி கொடுக்கும்போது அருகில் இருந்தேன் என்றால் ஆமாம். எந்த வங்கி காசோலை என்றால் இந்தியன் வங்கி ஆகும். காசோலையில் உள்ள விவரம் என்முன்பாகத்தான் எழுதி கையொப்பம் செய்துகொடுத்தார் என்றால் ஆமாம். யாருடைய அலுவலகத்தில் வைத்து கொடுத்தார் என்றால் கோயமுத்தூரில் உள்ள எதிரி நிறுவனத்தில் வைத்து கொடுத்தார்.

4) மேற்சொன்ன தொகை மீதி கொடுக்க வேண்டிய தொகை ரூ.3,50,000/– என்று சொல்லி காசோலை வழங்கினார். வேறு எந்த எதிரி கொடுக்கவேண்டிய பாக்கி இல்லை என்றால் ஆமாம். எனது பிரமான வாக்குமூலத்தில் பாக்கி தொகையை தவிர வேறு தொகை கொடுக்கவேண்டியதில்லை என சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். காசோலையை எந்த தேதியில் வசூலுக்கு போட்டு திருப்பப்பட்டது என்றால் எனக்கு பற்றி தெரியாது. இதைத்தான் வாக்குமூலத்திலும் தெரியாது என்று தான் சொல்லி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். அதில் அவ்வாறு விவரம் இருந்தால் அது தவறு என்றால் ஆமாம்.

5) அதன் பின்னர் நடந்த வரவு செலவு பற்றி பணம் ஏதாவது கொடுத்தாரா என்பது பற்றி தெரியாது என்றால் ஆமாம். புகார்தாரரிடம் எதிரி வழக்கு காசோலை கொடுத்தபிறகு எதாவது தொகை கொடுத்தாரா என்பது குறித்து பிரமாண வாக்குமூலத்தில் சொல்லிவில்லை என்றால் ஆமாம்.

6) காசோலை தனிநபர் உரிமை குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றும், காசோலையில் அது கண்டுள்ளதா என்றும் பார்த்தேனா என்றால் நான் காசோலையை வாங்கி பார்க்கவில்லை. நான் புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**